நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *223*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

223—

சொந்தக் கட்டடம்

***6871—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூரிலுள்ள அரசு கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் கிளை நூலகத்திற்கு இலவசமாக காலிமனை ஒதுக்கீடு செய்து தருமாறு அம்பத்தூர் நகராட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. இலவச காலிமனை பெறப்பட்டதும், மேற்படி நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.

திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள கொரட்டூர் பகுதியில் H.R.& C.E.–இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 188, நிலம் உள்ளது. அதனைக் கைப்பற்றி, 50

ஆண்டுகளாக பழமையாக உள்ள, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற அந்த நூல் நிலையத்தைச் சொந்தக் கட்டடத்தில் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை அந்த நகராட்சி நிருவாகம் அனுமதி பெற்ற பின்பு, அரசுக்குக் கருத்துரு விவரம் பெற்ற பின்பு, அந்த இடத்திலே அனுமதி பெற்ற பிறகுதான் உடனடியாக கட்டடம் கட்ட முடியும். ஆகவே, அனுமதியை நகராட்சியில் பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக அந்த நூலகத்தைக் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில், ராதாபுரத்தில் உள்ள நூலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மழைக் காலங்களில் ஒழுகுகின்ற நிலையில் இருக்கின்றது. எனவே, அந்தக் கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து நூலகங்களையும்*

2012 மே 7]

கட்டித் தர வேண்டும்—குறிப்பாக, வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற நூலகத்திற்கெல்லாம் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று ஆணைகள் வழங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மீது வருகின்ற காலத்தில் இந்த அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 மற்றும் 2)@

பட்டியல் 1

1—

பட்டா

வினா எண் 1647—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஆச்சுபாலம் ஊராட்சியில் சாகுபடி செய்யும் தரிசு நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நிலமற்ற ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, வருவாய் நிலை ஆணை எண் 15-ன்கீழ் பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் விவசாய நோக்கத்திற்காக

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS